தென் துளிர்

மாதாந்த இதழ்

தென் துளிர்

மாதம் : வைகாசி | இதழ் : 05

03
சமுர்த்தி - வளமான எதிர்காலம் நோக்கி

05
வளங்கள் கொஞ்சும் தென்மராட்சி

07
இன்றைய சமுதாயமும் இளைஞர்களும்

09
பிரதேச செய்திகள் & நிகழ்வுகள்





சமுர்த்தி ஆரோக்கிய உணவகம்





இம்மாத சிறப்பு : சமுர்த்தி

பிரதேச செயலகம் - தென்மராட்சி

நேர்மையான நிர்வாகம்-சிறந்த பொதுச்சேவை-மக்களின் நம்பிக்கை

சமுர்த்தி - “வறுமையை வென்று வளமான எதிர்காலத்தினை நோக்கி!”

சமுர்த்தி

சமுர்த்தி என்பது இலங்கையில் நிலவும் வறுமையைக் குறைத்தல் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நோக்கில் 1994 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு தேசிய திட்டமாகும். 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் மூலம் இது ஒரு திணைக்களமாக உருவாக்கப்பட்டது.

முக்கிய நோக்கங்கள்

1) வறுமை ஒழிப்பு: ஏழைக் குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுதல்.
2) வாழ்வாதார மேம்பாடு: சுயதொழில் மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான பயிற்சிகள் மற்றும் நிதி உதவிகளை வழங்குதல்.
3) சமூக அபிவிருத்தி: கிராமப்புற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் பல முக்கிய சேவைகளை வழங்குகிறது:

1) சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் (Micro Finance):
   குறைந்த வருமானம் பெறுபவர்கள் சேமிக்கவும், சிறிய அளவிலான வியாபாரக் கடன்களைப் பெற்று சுயதொழில் தொடங்கவும் இந்த வங்கிகள் உதவுகின்றன.
2) சமூக வலுவூட்டல்:
   இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு தையல், விவசாயம், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத் துறை போன்ற பல்வேறு பயிற்சிகளை வழங்குதல் மற்றும் வாழ்வாதார உதவிகளை வழங்குதல்.
3) சிப்தொற புலமைப்பரிசில் திட்டம்:
   சமுர்த்தி நிவாரணம் பெற்ற குடும்பங்களில் கல்வி சாதாரண தரத்தில் சித்தியடைந்து உயர்தரத்தில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு 2 வருடங்களுக்கு நிதி உதவிகள் வழங்குதல்.
4) வீட்டுத்திட்டம் வழங்குதல்:
5) சமூக மட்ட அமைப்புக்களை உருவாக்குதல்:
   குறித்த அமைப்புக்களினூடாக பொதுமக்களை ஒன்றிணைத்து அவர்களுக்கு சேமிப்பு மற்றும் கடன் வசதிகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
6) மரம் நடுகை
7) உற்பத்தி மாதிரிக்கிராமம்
8) போதை ஒழிப்பு வேலைத்திட்டம்
9) ஞாககார்த்த தினங்களை நடாத்துதல்
10) கெக்குலு சிறுவர் தினப் போட்டிளை நடாத்துதல்

நோக்கு

“2030 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற, வலுவூட்டப்பட்ட மற்றும் வளமான இலங்கையை உருவாக்குவதில் முதன்மையான நிறுவனமாக விளங்குதல்.”

குறிக்கோள்

துறைசார், சமூக அடிப்படையிலான அமைப்புகள், நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் வலையமைப்பு, தனியார், பொது, மக்கள் மற்றும் அரசியல் துறைகள், உள்ளூர் மற்றும் உலகளாவிய முகாமைகளின் ஒத்துழைப்புடன் அளிக்கும் திருப்திகரமான பங்களிப்பின் மூலம், பின்தங்கிய மக்களுக்கு (பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக, அரசியல் ரீதியாக, உடல் ரீதியாக, உளவியல் ரீதியாக, சட்ட ரீதியாக மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக) அதிகாரம் அளித்து, வறுமையற்ற வளமான நாட்டை உருவாக்குவதன் வழியாக பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்தல் மேலும், மக்கள் நலன் சார்ந்த முறையில் பயனுள்ள, செயல்திறன் மிக்க, விரைவான மற்றும் ஆக்கப்பூர்வமான தீர்வுகளை வழங்குவதன் மூலம் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்.”

தென்மராட்சி சமுர்த்தி பிரிவு

தென்மராட்சி பிரதேச செயலகமானது அறுபது கிராம அலுவர் பிரிவுகளை கொண்ட பிரதேச செயலகமாகும். அறுபது பிரிவுகளும் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் மற்றும் வரணி ஆகிய நான்கு வங்கி வலயங்களாக பிரிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. நான்கு வங்கிகளையும் முகாமை செய்வதற்காக வங்கிச் சங்கம் காணப்படுகின்றது. மேலும் உத்தியோகத்தர்களின் சுயவிபரக்கோவைகளை முகாமை செய்தல், கிடைக்கப்பெறும் நிதி ஒதுக்கீடுகளை முகாமை செய்தல் மற்றும் அனைத்து பிரதேச மட்ட சமுர்த்தி நடவடிக்கைகளுக்கும் தலைமை அலுவலகமாக சமுர்த்தி தலைமைப்பீடம் காணப்படுகின்றது. மேலும் நான்கு வலயத்திலும் கீழ்வரும் சமுர்த்தி குடும்பங்கள் மற்றும் சிறுகுழுக்கள் காணப்படுகின்றன.

தொ.இல	வங்கி வலயம்	சமுர்த்தி குடும்பங்கள்	சிறுகுழுக்கள்	சமுதாய மட்ட அமைப்புக்கள்
01	கைதடி	3,581	665	81
02	சாவகச்சேரி	4,709	722	89
03	கொடிகாமம்	1,036	830	79
04	வரணி	3,440	714	70

வளங்கள் கொஞ்சும் தென்மராட்சி



தென்மராட்சி என்பது இலங்கையின் யாழ் மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள மூன்று வரலாற்று சிறப்பு மிக்க பிரதேசங்களில் ஒன்றாகும். இது தனித்துவமும், வளமும், கலாச்சாரமும் கொண்ட ஓர் இடமாக திகழுகின்றது. இதன் நகரமாக சாவகச்சேரி விளங்குகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தின் மிக முக்கியமான விவசாய நிலங்களைக் கொண்டுள்ளதால் இப்பிரதேசம் "யாழ்ப்பாணத்தின் நெற்களஞ்சியம்" (Granary of Jaffna) என்று அழைக்கப்படுகிறது.

1. **மண் வளங்கள்**
   - ❖ **மண் வகை:** இப்பிரதேசத்தில் அதிக விளைச்சல் தரக்கூடிய செம்மஞ்சள் லட்டசோல் மண் (Red Yellow Latasol soil) காணப்படுகிறது.
   - ❖ **சமவெளித் தரைத்தோற்றம்:** இதுகடல் மட்டத்திலிருந்து அதிகபட்சமாக 6.7 மீற்றர் உயரத்தைக் கொண்ட ஒரு சமநிலப் பகுதியாகும்.

2. **நீர் வளங்கள்** (Water Resources)
   - ❖ **நிலத்தடி நீர்:** இங்கு வற்றாத ஆறுகள் என்று எதுவும் இல்லை. எனினும் இப்பகுதியில் காணப்படும் சுண்ணாம்புக்கல் பாறை அடுக்குகள் என்பன மழைக் காலங்களில் நீரைச் சேமித்து வைத்து நிலத்தடி நீர் வளத்தை தருகின்றது
   - ❖ **நீர்நிலைகள் மற்றும் குளங்கள்:** வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் கிடைக்கும் பருவகால மழையைக் கொண்டு இங்குள்ள குளங்கள் மற்றும் விவசாயக் கிணறுகள் (Agro wells) நிரம்புகின்றன. இவை விவசாயத்திற்கும் குடிநீருக்கும் ஆதாரமாக விளங்குகின்றன.
   - ❖ **காயல்கள் மற்றும் கடலேரிகள் (Lagoons):** இப்பிரதேசத்தின் எல்லைகளில் தொண்டமானாறு கடல் நீரேரி யாழ்ப்பாணக் கடல் நீரேரி உப்பாறு கடல் நீரேரி போன்ற பரந்த நீர் நிலைகள் அமைந்துள்ளன.

3. **விவசாய வளங்கள்** (Agricultural)



   - ❖ **நெற்செய்கை:** இப்பிரதேசத்தில் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் கிடைக்கும் பருவகால மழையைக் கொண்டு தாழ்நிலப் பகுதிகளில் நெற்பயிர் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

- **தோட்டப்பயிர்கள் மற்றும் பழவகைகள்:** தென்மராட்சிப் பகுதியானது மாம்பழம், பலாப்பழம் மற்றும் வாழைப்பழம் போன்ற பழங்களுக்கு புகழ்பெற்ற இடமாகும். கோடைகாலத்தில் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி உழுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு போன்ற தானியங்களும் கிழங்கு வகைகளும் பயிரிடப்படுகின்றன



- **தென்னை வளம்:** இப்பகுதியில் அதிகளவிலான தென்னந்தோட்டங்கள் காணப்படுகின்றன.
- **காடுகள்:** இப்பகுதியில் அடர்ந்த காடுகள் இல்லை என்றாலும் புதர்கள் சிறு சிறு காடுகள் மற்றும் பரந்த புல்வெளிகள் காணப்படுகின்றன.

4. **கடல் மற்றும் கரையோர வளங்கள்:** கச்சாய்க் கடல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நீரேரிகள் மீன்பிடித் தொழிலுக்கும் இறால் வளர்ப்பிற்கும் சாதகமான இயற்கைச் சூழலைக் கொண்டமைந்துள்ளது.



தென்மராட்சிப் பிரதேசம் 240.17 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இது யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 22.1% ஆகும். இப்பிரதேசம் 60 கிராம அலுவலர் பிரிவுகளையும் 138 கிராமங்களையும் உள்ளடக்கியது. இங்கு சுமார் 24,560 குடும்பங்களைச் சேர்ந்த 72,114 மக்கள் வசிக்கின்றனர். தென்மராட்சிப் பிரதேசம் வற்றாத ஆறுகள் இல்லாத உலர் வலயப் பகுதியாக இருப்பதால், நிலத்தடி நீரைச் சேமிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் வடகீழ் பருவமழைக் காலத்தில் (நவம்பர் - ஜனவரி) கிடைக்கும் நீரை முழுமையாகச் சேமிக்க, நீர்நிலைகள் மற்றும் குளங்கள் அவ்வப்போது தூர்வாரப்பட்டு புனரமைக்கப்படுகின்றன. இது விவசாயக் கிணறுகளின் நீர்மட்டத்தைப் பேணவும் உதவுகின்றது. தென்மராட்சியில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கப் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.







தொலைந்த நிஜங்கள்

பக்கத்து வீட்டுத் தோழனோடு
பகிர்ந்து உண்டோம் ஒரு தட்டில்
தெரு விளையாட்டுகளில்
தீர்ந்ததே இல்லை நம் சந்தோசங்கள் அன்று
அங்கொருவர் இங்கொருவர் என
அருகில் இருந்தும் பேசுவதில்லை இன்று
அனைவர் கைகளிலும் அழகிய செல்போன்கள்
உறவுகளோ வெறும் ஒன்லைனில்!
சுருக்கியது தொழில்நுட்பம் உலகை
மாற்றியது மனிதர்களின் இதயங்களை
வட்ஸப் ஸ்டேட்டசில் வெறும் வாழ்த்துக்கள்,
வாழ்க்கை முழுதும் பல (ஏ) மாற்றங்கள்!
வந்தது,விரல் நுனியில் உலகம்
செய்தது விடிய விடிய விழித்திருக்க
மறைந்தது கூடிப் பேசிய திண்ணைகள்
நகர்ந்தது கூகுளின் தேடலில் வாழ்க்கை
காத்திருந்தோம்,அன்று கடிதம் எழுதி
களித்திருந்தோம் அன்பான வரிகளை வாசித்து
அனுப்புகிறோம்,இன்று நொடியில் மெசேஜ்
இழக்கிறோம் நிஜமான பாசத்தை
இயந்திரங்கள் மனிதனாக மாறுகிறது,
மனிதர்களோ இங்கு இயந்திரமாக வாழ்கிறார்கள்!
தொழில்நுட்ப வளர்ச்சியின் வியப்போ ஆச்சரியம் !
மனிதம் தொலைந்து போனால் அது நம் வீழ்ச்சியின் உச்சம்!

இன்றைய சமுதாயமும் இளைஞர்களும்



ளைஞர்களின் போக்கு என்பது இன்றைய காலகட்டத்தின் மிக முக்கியமான மற்றும் பரவலாக விவாதிக்கப்படும் தலைப்புகளில் ஒன்றாகும். தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி, உலகமயமாக்கல் மற்றும் மாறிவரும் சமூகக் கட்டமைப்புகள் இன்றைய இளைஞர்களின் சிந்தனை மற்றும் வாழ்க்கை முறையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. நாம் எப்போதும் புதுமையை சிந்திப்பவர்களாகவும் பழமையை வெறுப்பவர்களாகவும் கேலி செய்பவர்களாகவும் மாறிவருகின்றோம் நாம் தற்போது 21ம் நுற்றாண்டின் விளிம்பில் உள்ளோம். உலக நாடுகள் எல்லாம் இப்போது நம் உள்ளங் கையில் வைத்திருக்கிறோம். உலக மயமாக்கல் என்பது அனைத்து பண்பாடுகளையும் அழித்து அறிவியல் விஞ்ஞானம் நவீனத்துவம் தலைதூக்கும் காலமாக இக்காலம் மாறிவருகின்றது. எமது ஒவ்வொரு மாற்றத்திற்கும் அரசியல் ரீதியான பின்னனி உண்டு என்பதையும் தாண்டி தொழில் நுட்ப விருத்தி கல்விசார் காரணிகள் இளைஞர்களிடத்தில் ஏற்படுத்தப்பட்ட மாயைத்தோற்றம் என்பன முதற்காரணிகளாக அமைந்துள்ளது. இதனால் இளைஞர்களிடத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் மனித வாழ்க்கைப் பெறுமானத்தை உணராதவர்களாக மாற்றியுள்ளது.



வாழ்க்கையில் இலக்கு, கடமைகள் பொறுப்புக்கள் என்பவற்றை உணராதவர்களாகவும், ஒழுக்கச் சீர்கேடு, வன்முறை, மதுப்பழக்கம், போதைவஸ்துக்களின் அடிமைகளாகவும் சுயநல மனப்பாங்கு நடத்தைப்பிறள்வு, சமய ஒழுக்கங்கள், மூத்தோரை மதியாமை, கலை பண்பாட்டு விழுமியங்களை பின்பற்றாமை போன்றன தற்கால இளைஞர்களிடத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நாகரீகம் என்பது மனிதர்களால் அவர்களது நற்குணங்கள், சேவை மனப்பான்மை, மூத்தோரை மதிக்கும் பண்பு, கடின உழைப்பு போன்றவற்றின் அடிப்படையில் உருவானதே நாகரீகமாகும். “இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்” என்ற விவேகானந்தரின் பொன்மொழிக்கு ஏற்ப, தொழில்நுட்பப் புரட்சியும் உலகமயமாக்கலும் இளைஞர்களின் வாழ்க்கை முறை, சிந்தனை மற்றும் செயல்பாடுகளில்



மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இன்றைய நவீன இளைஞர்களின் போக்குகளைப் பற்றி காண்போம்.

- குடும்பப்பிணைப்பு குறைவடைந்து பிணக்குகள் அதிகரித்துள்ளன.
- மூத்தவர்கள் மற்றும் முதியோரை மதித்து நடக்காமை.
- தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களின் ஆதிக்கம்.
- ஸ்மார்ட்போன் மற்றும் சமூக ஊடகங்கள் போன்றவற்றுக்கு அடிமையாவது.
- நிஜ உலகத் தொடர்பும் கவனச் சிதறலும்.
- மிகக் குறுகிய காலத்தில் பெரும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற போக்கு.
- வன்முறை மற்றும் தவறான குழு மோதல்களில் ஈடுபடுதல்.
- மேற்கத்திய கலாச்சாரத்தின் அதீத தாக்கம்.
- துரித உணவுகள் மீதான மோகம்.
- போதைப்பொருள் பழக்கங்களுக்குச் சிலர் ஆளாவது சமுதாயத்திற்குப் பெரும் சவாலாக உள்ளது
- இரவு நேரத் தூக்கமின்மை காரணமாகப் உடல் நலப் பாதிப்புகளுக்கு உள்ளாதல்.

என்பன இன்றைய இளைஞர்களின் மாற்றங்கள் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.



நவீன இளைஞர்களின் போக்கு என்பது ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றது. அவர்களிடம் இருக்கும் வேகம் துடிப்பு மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆர்வம் ஆகியவை நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் வல்லமை கொண்டவை. அதே வேளையில் அவர்கள் தவறான வழிகளில் திசைமாறிப் போகாமல் தடுக்க முறையான வழிகாட்டுதலும், தார்மீகக் கல்வியும் அவசியமாகும். இளைய சமுதாயத்தின் ஆற்றலைச் சரியான முறையில் பயன்படுத்தினால், ஒரு மிகச்சிறந்த, உலகத்தரம் வாய்ந்த சமுதாயத்தை நம்மால் உருவாக்க முடியும். இளைஞர்களின் சக்தி என்பது ஒரு காட்டாற்று வெள்ளம் போன்றது அதை சரியான பாதையில் திருப்பினால் அணைக்கட்டி விவசாயம் செழிக்க வைக்கலாம், தவறான பாதையில் விட்டால் பேரழிவை ஏற்படுத்தும். நவீன இளைஞர்களின் போக்கில் சில கவலைக்குரிய விஷயங்கள் இருந்தாலும், சரியான வழிகாட்டுதலும், திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகளும் கிடைத்தால், எதிர்கால உலகை மிகச் சிறந்த பாதையில் அவர்களால் கொண்டு செல்ல முடியும்.

வியாபாரத் திட்டம் தயாரித்தல்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் முயற்சியாளர்களுக்கு பிரதேச செயலாளர் F.C சத்தியசோதி தலைமையில் வியாபாரத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கான வியாபாரத் திட்டமானது (வியாபார நடவடிக்கை தொடர்ச்சியான வரவு செலவு, வளங்களினை திட்டமிடல் மற்றும் சந்தைப்படுத்துதல்) 20 உள்ளூர் முயற்சியாளர்களுக்கு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

இவ் வியாபார திட்டமானது (Business plan) 05.05.2026ம் திகதி உள்ளூர் முயற்சியாளர்களுக்கான ஊக்குவிக்கும் நுண்கடன் திட்டம் பெறுவதை நோக்கமாகவும் மற்றும் தமது வியாபாரத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்ப தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.





விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்/மட்டுவில் மகா வித்தியாலயத்தில் தரம் 11 மாணவர்கள், பெற்றோர்களிற்கான விழிப்புணர்வு நிகழ்வானது 2026.05.06 (புதன் கிழமை) மதியம்12.30 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் சிறுவர் பாதுகாப்பு, மாணவர்களது கடமைகள், பெற்றோர்களின் பொறுப்புக்கள் மற்றும் ஒழுக்க மேம்பாடு தொடர்பாகவும் தெளிவூட்டப்பட்டது. இந்த நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் அவர்கள் வளவாளராக கலந்துகொண்டார்.





சித்திரை புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு - கைதடி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி

கைதடி சமுர்த்தி வங்கியின் சித்திரைப்புத்தாண்டு விளையாட்டு விழாவானது கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் 05.05.2026 செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு கைதடி கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திரு.இ.யோகேஸ்வரன் தலைமையில் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமாகியது.



இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சமுர்த்தி மாவட்ட பணிப்பாளர் மதிப்பிற்குரிய திரு.பொ.ஸ்ரீவர்ணன் அவர்களும் சிறப்பு விருந்தினராக மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் திரு.F.C சத்தியசோதி அவர்களும் கௌரவ விருந்தினர்களாக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் திருமதி.ஜெ.வசந்தி, முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி. ஆ.உமாதேவி, சீபன் பாஸ்கர் லேணர்ஸ் அதிபர் கு.டசீபன், சனசமூக நிலைய தலைவர் அ.கயுந்தன், கிராம உத்தியோகத்தர் இ.தர்சன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

.





தேசத்தை கட்டியெழுப்பும் வளமான கிராமம்

தேசத்தை கட்டியெழுப்பும் வளமான கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமூக உற்பத்தித்திறன் மாதிரிக் கிராம திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு கிராம அலுவலரின் தலைமையில் 08.05.2026 ஆம் திகதி மந்துவில் மாதிரிக் கிராமத்தின் வேளையடி பாடசாலை வளாகத்தில் "வலுசக்தியைச் சேமியுங்கள் - பரிசுகளை வெல்லுங்கள்" என்ற போட்டி தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.



அதில் ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான மின்சாரக் கட்டணங்களை ஒப்பிட்டு, அதிகபட்ச மின்சார அலகுகளைச் சேமித்த குடும்பங்கள் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்படுமெனவும் ஏனைய விதிமுறைகள் தொடர்பாகவும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தரால் சிறுவர் பாதுகாப்பு மற்றும் பெற்றோரின் பொறுப்பு எனும் தலைப்பில் விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.



இடர் மேலாண்மை முன்னாயத்த திட்டம்

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்கான இடர் மேலாண்மை முன்னாயத்த திட்டம் தயாரிப்பதற்கான ஆரம்ப செயலமர்வு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் 13.05.2026 அன்று காலை 9.30 மணிக்கு பிரதேச செயலாளர் திரு F.C சத்தியசோதி தலைமையில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர் என்.எ.பிறேம்ராஜ் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





சிறுவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு

கொடிகாமம் தெற்கு தவசிகுளம் (J/328) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சிறுவர் கழகச் சிறுவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு 08.05.2026 பி.ப 3.00 மணிக்கு தவசிகுளம் கண்ணகை அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இந்த நிகழ்வில் வளவாளராக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் கலந்து கொண்டார். இந்த நிகழ்விற்கு அனுசரணை JSAC நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.



வினைத்திறனான சேவை வழங்கல் மற்றும் சமூக ஈடுபாடு தொடர்பான பயிற்சி



வினைத்திறனான சேவை வழங்கல் மற்றும் சமூக ஈடுபாடு தொடர்பான சேவை வழங்குநர்களுக்கான பயிற்சி, அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு (SOND) நிறுவனத்தினால் 14.05.2026 அன்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் திரு.இ.திலீபன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் SOND நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு.ச.செந்தூராசா அவர்களும் இத்திட்டத்தின் கீழ் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர், சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஏனைய கிராம மட்ட உத்தியோகத்தர் மற்றும் கிராம அலுவலர் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்த பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். வளவாளராக இலங்கை திட்டமிடல் சேவை



சிரேட்ட ஓய்வுநிலை உத்தியோகத்தர் திரு.புவனேந்திரன் அவர்கள் கலந்துகொண்டார். செயற்றிட்டங்கள் எமது பிரிவில்10 (J/290, J/291, J/295, J/301, J/306, J/308, J/317, J/322, J/338, J/344)கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படுகின்றது. இச் செயற்திட்டமானது பாதிக்கப்பட்ட சமுதாயங்களுக்கும் சேவை வழங்குநர்களுக்கும் இடையே ஒற்றுமையை வலுப்படுத்தும் திட்டமாகும்

போதை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் SDG திட்டத்தின் கீழ் நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுவலுவுள்ளவர்களுக்கான போதை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு 14.05.2026 நல்லூர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி அ.அனுஷா அவர்களால் நடாத்தப்பட்டது.





கிராமிய காணி பயன்பாட்டு அபிவிருத்தித்திட்டம்

கிராமிய காணி பயன்பாட்டு அபிவிருத்தித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் உதவிப் பிரதேச செயலர் தலைமையில் கரம்பகம் கிராம உத்தியோகத்தரின் பங்களிப்புடன் கரம்பகம் கிராம செயலகத்தில் 15.05.2026 அன்று இடம்பெற்றது.





நிகழ்வில் காணிப்பயன்பாடு தொடர்பான திட்டங்கள் ஆராயப்பட்டதோடு வீதிகள், வீதி மின்விளக்குகள், புகையிரதநிலையக்கடவை, வாய்க்கால்கள், குளங்கள், கல்வி, விவசாயம் மற்றும் கால்நடைவளர்ப்பு போன்றவற்றிற்கான அபிவிருத்திகள் தொடர்பான ஆலோசனைகளும் வழிமுறைகளும் துறைசார் திணைக்கள உத்தியோகத்தர்களினால் பொதுமக்களிற்கு வழங்கப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு, கல்வியின் முக்கியத்துவம் மற்றும் பெற்றோர்களின் பொறுப்பு தொடர்பான விழிப்புணர்வு

யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் தரம் 10,11 மாணவர்கள், பெற்றோர்களிற்கான விழிப்புணர்வு நிகழ்வு 2026.05.18 (திங்கட்கிழமை) பி.ப 1.00 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.



இக்கருத்தரங்கில் சிறுவர் பாதுகாப்பு, கல்வியின் முக்கியத்துவம், பெற்றோர்களின் பொறுப்புக்கள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது. இந்த நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் அவர்கள் வளவாளராக கலந்துகொண்டார்.

ஓவியப்பயிற்சி பட்டறையும் மற்றும் காட்சிப்படுத்தலும்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மாதாந்த கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் ஓவியப்பயிற்சி பட்டறையும் மற்றும் காட்சிப்படுத்தலும் 2026.05.17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வரணி கலாசார மத்திய நிலையத்தில் நடாத்தப்பட்டது.





திரு. துரைசிங்கம் குமரநாதன்(சித்திர பாட ஆசிரியர்)அவர்கள் வளவாளராக கலந்துகொண்டிருந்தார். கலாசார மத்திய நிலைய மாணவர்கள் மற்றும் சிறுவர் கழகத்தினை சேர்ந்த சிறுவர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.



தொழில் முறை பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் J/339, J/340, J/341 கிராம பிரிவுகளை சேர்ந்த பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர் யுவதிகளிற்கான தொழில் முறை பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு தலைமையக முகாமையாளர் தலைமையில் 19.05.2026 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வரணி வடக்கு கிராம செயலக பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திறன்விருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் வளவாளர்களாக பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திறன்விருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கடற்கரைகளை சுத்தம் செய்யும் தேசிய நிகழ்ச்சி திட்டம்

அழகான கடற்கரை - ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத்தளம்" என்ற கருப்பொருளில் நாடளாவிய ரீதியில் கடற்கரைகளை சுத்தம் செய்யும் தேசிய நிகழ்விற்கமைய, தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில் J/301 கோவில் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் லிகோரியார் தேவாலயத்தை அண்மித்த கடற்கரைப் பிரதேசமும் J/ 299 தனங்கிளப்பு கிராம அலுவலர் பிரிவில் சங்குப்பிட்டி பாலத்தை அண்மித்த கடற்கரை பிரதேசமும் சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டது. லிகோரியார் தேவாலயத்திற்கு அண்மையான கடற்கரையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் அவர்கள் கலந்து கொண்டு சுற்றுலாத்துறைக்கு முதன்மையான விடயமாக காணப்படும் இலங்கையின் அழகிய நீண்ட





கடற்கரையை தூய்மையானதாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் பற்றி எடுத்துக் கூறினார். இந்நிகழ்வில் வணக்கத்திற்குரிய லிகோரியார் தேவாலய பங்குத்தந்தை, தென்மராட்சி பிரதேச செயலாளர் கு.ஊ சத்தியசோதி அவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சாவகச்சேரி நகர சபையின் வட்டார உறுப்பினர், பொதுச் சுகாதார பரிசோதகர்,பிரஜாசக்தி தலைவர், சாவகச்சேரி நகர சபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், பொலிஸ் மற்றும் ராணுவ வீரர்கள் கலந்துகொண்டனர். இதேபோல் சங்குப்பிட்டி பாலத்திற்கு அண்மையான கடற்கரையில் இடம் பெற்ற நிகழ்வில் தனங்கிளப்பு பொதுமக்கள், பொதுச் சுகாதார பரிசோதகர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ராணுவ வீரர்கள் கலந்துகொண்டனர்.



துணிப்பை தயாரிக்கும் பயிற்சி நெறி

வட மாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் 25,27.05.2026 ஆம் திகதிகளில் நுணாவில் மேற்கு பொது நோக்கு மண்டபத்தில் 25 பயனாளிகளுக்கு துணிப்பை தயாரிக்கும் பயிற்சி நெறியானது நடைபெற்றது. பயிற்சியின் நிறைவு நாளில் பிரதேச செயலாளர் கலந்துகொண்டு குறித்த பயிற்சிநெறி தொடர்பாக கலந்துரையாடி பயிற்சியாளர்களுக்கான ஆலோசனைகளை வழங்கினர்.





ஆயுள்வேத மருத்துவ முகாம்

ஆயுள்வேத அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கோவிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவின் கிராமமட்ட உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைத்தலின் கீழ் ஆயுள்வேத மருத்துவ முகாம் ஆனது 27.05.2026 இன்று கைதடி சித்த வைத்தியசாலை அனுசரணையுடன் இடம்பெற்றது.





அத்துடன் சமூக சித்த மருத்துவர் Dr.N.ஜான்சி அவர்களால் "தொற்று நோய், தொற்றா நோய் பரவுதல் மற்றும் உணவுப் பழக்க வழக்கம்" தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டது . இதில் பல பொதுமக்களும் பயன்பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



“நமது கடமைகளை நிறைவேற்றுவோம் நமது உரிமைகளைப் பாதுகாப்போம்” விழிப்புணர்வு

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் தேசிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட “நமது கடமைகளை நிறைவேற்றுவோம் நமது உரிமைகளைப் பாதுகாப்போம்” விழிப்புணர்வு செயற்பாடு மாதிரிக்கிராமமான மந்துவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 2026.05.27 புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் அதிபர் தலைமையில் இடம்பெற்றதுடன், மு.ப 11.30 மணிக்கு யா/மந்துவில் நோ.க.த பாடசாலையில் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சிறுவர் உரிமைகள்,சிறுவர் பாதுகாப்பு மற்றும் தொற்றாநோய்கள் தொடர்பான விடயங்கள் தெளிவூட்டப்பட்டன.இந் நிகழ்வில் தரம் 7 தொடக்கம் 11 வரையான மாணவர்கள் கலந்து கொண்டதுடன் வளவாளர்களாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி Dr.G.அச்சுதன் மற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்







போதை பழக்கத்தை தவிர்ப்போம் ஆரோக்கியமான வாழ்வை அடைவோம்

போதை பழக்கத்தை தவிர்ப்போம் ஆரோக்கியமான வாழ்வை அடைவோம்"எனும் தொனிப்பொருளில் தென்மராட்சி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் வருடம் தோறும் நடாத்திவரும் புகைத்தல் எதிர்ப்பு கொடிதின சேமிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் வீதி நாடக நிகழ்வானது மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் F.C.சத்தியசோதி அவர்களின் பங்குபற்றுதலுடன் வரணி வங்கி மீசாலை மேற்கு கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் 31.05.2026 காலை 8.30 மணிக்கு மீசாலை புத்தூர் சந்தியிலிருந்து மீசாலை சந்தி வரை நடைபவனியாக நடைபெற்றது.





இந்நிகழ்வில்சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், CBO அங்கத்தவர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் பி.ப 2.30 மணிக்கு கொடிகாமம் சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் யா/கொடிகாமம் நாவலடி பாடசாலையிலிருந்து கொடிகாமம் பஸ் தரிப்பிடம் வரை நடைபவனி இடம்பெற்று வீதி நாடக நிகழ்வானது மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் F.C.சத்தியசோதி அவர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.



தொடர்ந்து கொடிதின சேமிப்பு நிதியிலிருந்து வறிய மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்கி வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், CBO அங்கத்தவர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



போதை பழக்கத்தை தவிர்ப்போம் ஆரோக்கியமான வாழ்வை அடைவோம்” வேலைத்திட்டம் - மாவட்ட மட்ட நிகழ்வு

போதை பழக்கத்தை தவிர்ப்போம் ஆரோக்கியமான வாழ்வை அடைவோம்” எனும் தொனிப்பொருளில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் வருடம் தோறும் நடாத்திவரும் புகைத்தல் எதிர்ப்பு தின வேலைத்திட்டத்தில் 2025ம் ஆண்டுக்கான கொடிதின சேமிப்பு வேலைத்திட்டத்தில் மாவட்ட மட்டத்தில் சிறப்பாக செயலாற்றிய உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வானது 31.05.2026 காலை 9.00 மணிக்கு ஆவரங்கால் சரஸ்வதி மண்டபத்தில் யாழ் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் மதிப்பிற்குரிய பொ.ஸ்ரீவர்ணன் தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்விற்கு யாழ் மாவட்ட செயலரும் மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் நாயகமுமான உயர்திரு.ம.பிரதீபன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உத்தியோகத்தர்களை கௌரவித்தார். இந் நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் பிரதேச செயலாளர், முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், பிரதேச மற்றும் கிராமமட்ட தலைவர்கள் போன்றோரின் சேமிப்பினை வாழ்த்தி கௌரவிக்கும் முகமாக பதக்கம் அணிவித்து மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



தென்மராட்சியும் சிறுகைத்தொழிலும்

சிறுகைத்தொழில் முயற்சி அரசாங்கத்தின் இருப்பைத்தீர்மானிப்பதில் பெரும் பங்களிப்பைச் செய்கிறது இது குறைந்த முதலீட்டில், வீட்டில் இருந்தபடியே சுயதொழில் தொடங்கி பொருளாதார ரீதியாக முன்னேறுவதற்கான ஒரு சிறந்த வழியாகும். சிறு கைத்தொழில் முயற்சி மக்களிடம் செல்வாக்கையும் மதிப்பையும் ஏற்படுத்துகின்றது பெரும்பாலான வளர்ச்சி அடைந்த நாடுகளில் இத்தொழிலுக்கு மதிப்பு இருப்பதில்லை எமது நாட்டைப்பொறுத்தவரை இதற்கான பங்களிப்பும் ஒதுக்கீடும் அதிகமாக உள்ளது சிறு தொழில் எனும் போது இதற்குள் சிறிய விவசாயம். கைத்தொழில். சேவைசார் முயற்சிகள் உணவுப்பண்டங்கள். என்பன அடங்குகின்றது

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.6% மான பங்களிப்பை சிறுகைத்தொழில்கள் செய்கின்றது எமது உள்ளூர் உற்பத்திப் பொருட்களை பொறுத்த வரை தும்புத்தொழில், பனை சார் உற்பத்தி, தளபாட உற்பத்தி, கருவாடு உற்பத்தி, தோணி கட்டுதல், இப்போது பழமையான பொருட்களான பனாட்டு, புளுக்கொடியல், குரக்கன் உற்பத்தி என்பனவும் தற்காலத்தில் சிறுகைத்தொழில உற்பத்தியில் அடங்குகின்றன.

சிறுகைத்தொழிலினை மேற்கொள்ளும் போது மூலதனப் பிசச்சனை, வேலையில்லா பிரச்சனை, மூலவளங்களை பெறுவதிலுள்ள சிக்கல், அபிவிருத்தி குறைந்த தொழிநுட்பம் என்பன இதில் செல்வாக்கு செலுத்துகின்றது.இவ்வாறான உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்ளும் பயனாளர்களுக்கு அவர்களின் வாழ்வாதராத்தினை மேம்படுத்தும் நோக்கில் சில திட்டங்களை முன்வைத்தால் நன்றாக இருக்கும்.

- வரிச்சலுகை அழித்தல்
- தீர்வையின்றிய இயந்திரக் கொள்வனவு
- சந்தைப்படுத்தல் வசதிகள்
- நடுத்தர /சிறிய கடன் திட்டங்கள் வழங்கல்
- ஊழியர்களுக்கான பயிற்சிகள் வழங்கல்

என்பன உற்பத்தியின்அளவை உயர்த்துவதற்கு காரணிகளாக அமையும் ஆனாலும் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை அதிகளவான சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் உள்ளபோதிலும் அவர்களின் உற்பத்தி முயற்சிக்கு தடையாக உள்ள காரணிகளும் உண்டு அவை

- ❖ பயிற்சி பெற்ற தொழிலாளர் குறைவு
- ❖ மூலதனப்பற்றாக்குறை
- ❖ பெருமளவான வரிகள்
- ❖ உற்பத்திச் செலவு அதிகம்
- ❖ இறக்குமதி பொருட்களுக்கான போட்டித்தன்மை
- ❖ ஆதிக சட்டவரையறை
- ❖ சந்தை வாய்புக்கள் குறைவு

என்பன காணப்படுகின்றன. இவற்றையும் மேம்படுத்துவதன் மூலம் பல பிரச்சனைகளுக்கு தீர்வு கான முடியும் எமது சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தைப் பொறுத்தவரை எமது கிராம மட்ட

உத்தியோகத்தர்களைக் கொண்டு இவ்வாறான மக்களை இனம்கண்டு இதற்கான தீர்வைப்பெற்றுக்கொள்ளும் முகமாக உற்பத்தியின் அளவை பெருக்குவதற்கும் அக்குடும்பங்களை வலுப்படுத்தும் நேக்கிலும் பல திட்டங்களை முன்வைத்துள்ளோம்

- சமுர்த்தி அஸ்வெசும பயனாளர்களை இனம் கண்டுஅவர்களை தொழில் முயற்சியாளராக்குதல்
- தெழில்முயற்சிக்கு போதிய வலுப்படுத்தல் வேலைகளைச்செய்தல்
- இலகு கடன் வசதியை வழங்குதல்
- தொழில் வழிகாட்டல் பயிற்சிகளை வழங்குதல்
- தெழில் முயற்சிக்கேற்ப உபகரணங்கள் வழங்கல்
- சேமிப்பை ஊக்குவித்தல்
- குடும்ப வருமானத்தை அதிகரித்தல்

என்பவற்றை எமது திணைக்களம் மேற்கொன்டு கிராம மக்களின் வருமானத்தை உயர்த்துவதுடன் வறுமையற்ற ஓர் தேசத்தை உருவாக்குதலை குறிக்கோளாக கொண்டுள்ளது

தென் துளிர் இதழ் குழு

- திரு F.C சத்திய சோதி
(பிரதேச செயலாளர்)
- திருமதி லாகினி நிருபராஜ்
(உதவி பிரதேச செயலாளர்)
- திருமதி சுபா தர்சன்
(தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்)
- திருமதி லாவண்யா சதாரூபன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

மாதாந்த இதழாசிரியர்கள்

- திருமதி. வசந்தி ஜெயக்குமார்
(சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர்)
- திரு.சபாரட்ணம் ராகவன்
(சமுர்த்தி முகாமயாளர்)
- திரு.வைரமுத்து கோகுலன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)
- திருமதி.சுரேகா அருட்கரன்
(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)
- திருமதி.கேஷாலினி தீபன்
(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)